தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## முல்லைப் பெரியாறு அணை மேற்பார்வை குழுவின் மூன்றாவது ஆலோசனைக்கூட்டம்



முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்து அப்பணிகளை மேற்பார்வையிட்டு செயல்படுத்த மத்திய அரசு சார்பில் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் மூன்றாவது ஆலோசனைக்கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. முல்லைப் பெரியாறு அணை பகுதியில் உள்ள தமிழக பொதுப்பணித்துறை அலுவலகத்தில் இன்று நடக்கும் இந்த கூட்டத்தில் அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தும் போது, புதிதாக நீர் தேங்கும் இடங்கள் குறித்து ஆலோசிக்கப் படும்எனத்தெரிகிறது.

## தமிழகம், புதுச்சேரியில் இன்று மழை பெய்யும்: வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு




தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் இன்று (செவ்வாய்க்கிழமை) அநேக இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும் தமிழ்நாட்டில் சில இடங்களில் பலத்தமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 24 மணிநேரத்தில் சிவகாசியில் 8 செ.மீ., தம்மம்பட்டி 6 செ.மீ., பெண்ணாகரம் 5 செ.மீ., ஒகேனக்கல், கரூர், சின்னக்கல்லாறு, தொழுதூர், பரமத்தி வேலூர் தலா 4 செ.மீ., திருவண்ணா மலை, வேதாரண்யம், பஞ்சப்பட்டி, அவினாசி, திருப்பத்தூர், நெய்வேலி, சூளகிரி, மங்களாபுரம் தலா 3 செ.மீ. மழை பதிவாகி உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

### திண்டுக்கல் பகுதியில் மழை

திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக சாரல் மழை பெய்து வரும் நிலையில் திங்கள்கிழமை பல்வேறு இடங்களில் பரவலாக மழை பெய்தது. வேடசந்தூர், நத்தம், வடமதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில் பலத்த மழை பெய்தது. சுமார் 2 மணி நேரம் பெய்த மழையால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து சென்றது. சின்னாளாபட்டி பகுதியிலும் லேசாக சாரல் மழை பெய்தது.

## காளான் வளர்ப்பு பயிற்சி முகாம்

அரூரை அடுத்த எருமியாம்பட்டி இ.ஆர்.கே. மகளிர் கல்லூரியில் காளான் வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது. பயிற்சி முகாமை இ.ஆர்.கே. கல்வி நிறுவனத்தின் தாளாளர் இ.ஆர்.செல்வராஜ் தொடக்கி வைத்தார். இயற்கை முறையில் காளான் வளர்த்தலில் புதிய தொழில்நுட்பங்கள், பயன்பாடு, காளான் வகைகள், தேவைகள், காளான் உண்பதால் ஏற்படும் நன்மைகள் குறித்து பேராசிரியர்கள் எ.பன்னீர்செல்வம், ஆர்.செந்தில்குமார் ஆகியோர் பேசினர். பயிற்சி முகாமில் இ.ஆர்.கே. கல்லூரி முதல்வர் பெ.மாது, துணை முதல்வர் டி.சக்தி, உதவிப் பேராசிரியர்கள் ரா.மகாலிங்கம், க.மேகலா, நிர்வாக அலுவலர் சொ.அருள்குமார், இ.ஆர்.கே. மேல்நிலைப் பள்ளி முதல்வர் ரா.தீத்துமாலை, கல்வியியல் கல்லூரி முதல்வர் வி.சீனிவாசன் மற்றும் கல்லூரி மாணவிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## அக்கரைப்பட்டியில் ரூ.12 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் அக்கரைப்பட்டி ஏல மையத்தில் திங்கள்கிழமை 394 பருத்தி மூட்டைகள் ரூ.12 லட்சத்துக்கு ஏலம் போனது. அக்கரைப்பட்டி ஏல மையத்துக்கு திங்கள்கிழமை 60 கிலோ கொண்ட 394 சுரபி ரக பருத்தி மூட்டைகள் விற்பனைக்கு விவசாயிகள் கொண்டுவந்தனர். ஓர் குவிண்டால் ரூ.7,816 முதல் ரூ.8,383 வரை ஏலம் போனது. மொத்தம் விற்பனைக்கு வந்த பருத்தி மூட்டைகளும் ரூ.12 லட்சத்துக்கு ஏலம் போனது. பருத்தி மூட்டைகளை திருச்செங்கோடு, மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம், சேலம் பகுதிகளிலிருந்து வந்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். இந்தத் தகவலை தொடக்க கூட்டுறவு வங்கித் தலைவர் ரவிச்சந்திரன் தெரிவித்தார்.

## ஆக.22-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருச்சி மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறைதீ0ர்க்கும் நாள் கூட்டம் ஆகஸ்ட் 22-ம் தேதி (வெள்ளிக்கிழமை) நடைபெறுகிது. ஆட்சியரக் குறைதீ0ர் கூட்ட அரங்கில் காலை 10.30 மணிக்கு நடைபெறும் இக்கூட்டத்தில் விவசாயிகள்,

விவசாய சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று, நீர்ப்பாசனம், வேளாண்மை, இடுபொருள்கள், வேளாண் சம்பந்தப்பட்ட கடனுதவிகள், விவசாய மேம்பாட்டுக்கான நலத்திட்டங்கள் குறித்து நேரிலோ, மனுக்கள் மூலமாகவோ தெரிவித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஜெயசிறி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

**<u>நாகுடியில் காவிரி நீருக்கு மலர் தூவி வரவேற்பு</u>**

மேட்டூரிலிருந்து திறக்கப்பட்ட காவிரி நீர் கல்லணை வழியாக புதுக்கோட்டை மாவட்டம், நாகுடிக்கு ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வந்தபோது விவசாயிகள் மலர் தூவி வரவேற்றனர். அறந்தாங்கி தொகுதியைச் சேர்ந்த அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி ஒன்றிய விவசாயிகள் கல்லணைக் கால்வாய் மூலம் காவிரி நீரைப் பயன்படுத்தி சுமார் 27 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சம்பா சாகுபடி மேற்கொள்கின்றனர். ஆக. 10-ம் தேதி மேட்டூரிலிருந்து திறக்கப்பட்ட காவிரி நீர் கல்லணை வந்து, 14-ம் தேதி பாசனத்துக்காக திறக்கப்பட்டது. இந்தத் தண்ணீர் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் (ஆக. 17) நாகுடி பகுதிக்கு வந்து சேர்ந்தது.

அப்போது, அறந்தாங்கி ஒன்றியக்குழுத் துணைத் தலைவர் பி.எம். பெரியசாமி, புதுக்கோட்டை மாவட்ட கல்லணைக் கால்வாய் பாசனதாரர் சங்கத் தலைவர் கே. ராமசாமி, கல்லணைக் கால்வாய் கோட்ட நாகுடி பிரிவு உதவி பொறியாளர் தென்னரசு, ஊராட்சி மன்றத் தலைவர்கள் அத்தாணி க. பரமசிவம், நாகுடி சேட்முகமது மற்றும் விவசாயிகள் மலர் தூவி காவிரி நீரை வரவேற்றனர்.

இதுகுறித்து மாவட்ட கல்லணைக் கால்வாய் பாசனதாரர் சங்கத் தலைவர் கே. ராமசாமி கூறியது:

கடந்த ஆண்டு முறையாக இப் பகுதிக்கு காவிரி நீர் வரவில்லை. இதனால் சுமார் 15 ஆயிரம் ஏக்கரில் நடவு செய்யப்பட்டிருந்த சம்பா பயிர்கள் கருகிவிட்டன.

எனவே, இந்த ஆண்டு முழுமையாக கடைமடை பகுதிகளுக்கு நீர் செல்லும் அளவுக்கு, தமிழக அரசு தண்ணீரை திறந்துவிட வேண்டும் என்றார்.

## ஆக. 22-ல் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 22-ம் தேதி நடைபெறவுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

இந்தக் கூட்டத்தில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்குத் திட்ட விளக்கம் அளிக்கப்படவுள்ளது. இதில் விவசாயிகள், முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் அனைவரும் நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தோட்டக்கலைத் துறை போன்ற விவசாயம் தொடர்புடைய கருத்துகளை மட்டும் தெரிவிக்கலாம். இதில், கருத்துகளை தெரிவிக்க விரும்புபவர்கள் தங்களது பெயர், ஊர், வட்டாரத்தை வரும் 22-ம் தேதி காலை 8.30 மணி முதல் 10 மணி வரை கணினியில் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வட்டாரத்துக்கும் பதிவு செய்துள்ள விவசாயிகளில் முதல் இருவர் தங்களது கருத்துகளைத் தெரிவிக்க அனுமதிக்கப்படுவர். மேலும், விவசாயிகள் அளிக்கும் கோரிக்கை மனுக்களை கணினியில் பதிவு செய்து ஒப்புதல் பெற்று, பின்னர் மனுக்களை அளிக்க வேண்டும்.

## பயிர் பாதுகாப்பு உபகரணங்கள் பராமரிப்பு பற்றி இன்று பயிற்சி

நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு பயிர் பாதுகாப்பு உபகரணங்கள் உபயோகம் மற்றும் பராமரிப்பு குறித்து ஒருநாள் பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது. இதில் பயிர் பாதுகாப்பு உபகரணங்களை கையாளுதல், பாதுகாப்பு முறைகள், உபயோகிக்கும்போது ஏற்படும் இடர்பாடுகளை களைவது போன்றவை குறித்து தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்படவுள்ளது. ஆர்வமுள்ள விவசாயிகள் இப்பயிற்சியில் கலந்து கொள்ளலாம் என நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் க. சோழன் திங்கள்கிழமை தெரிவித்துள்ளார்.

## வீட்டுத் தோட்டப் பயிற்சி முகாம்

கருங்கல் அருகே உள்ள தெருவுக்கடையில் வீட்டுத் தோட்டம் குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது. கோட்டாறு கத்தோலிக்க மறைமாவட்ட கிட்ஸ் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற இந்த முகாமுக்கு ஆசிரியர் இன்னாசிமுத்து தலைமை வகித்தார். கூட்டமைப்பின் மண்டலத் தலைவர் சேவியர் முன்னிலை வகித்தார். இயக்குநர் மைக்கேல்ராஜ் முகாமைத் தொடங்கி வைத்துப் பேசினார். முகாமில், வேளாண் அறிஞர் அக்ரி ராஜகுமார் பங்கேற்று வீட்டுத் தோட்டம், மாடித் தோட்டம், பூந்தோட்டம் உள்ளிட்டவைகள் குறைந்த செலவில் அமைக்கும் வழிமுறைகள் குறித்து விளக்கினார். மேலும், காய்கனி பயிர்கள் விதைப்பு முதல் அறுவடைவரை பின்பற்ற வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்தும் செய்முறை விளக்கமளித்தார். இதில், கிட்ஸ் பணியாளர்கள் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## முட்டை விலை அதிகரிப்பு



நாமக்கல் : நாமக்கல் முட்டையின் விலை 285 பைசாவாக நேற்று நிர்ணயம் செய்யப்பட்டது. நாமக்கல்லில் முட்டைக்கு விலை நிர்ணயம் செய்யும் கோழிப்பண்ணையாளர்கள், வியாபாரிகள் கூட்டம் நேற்று நடந்தது. இதில், முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 10 பைசா உயர்த்தப்பட்டது. ஒரு முட்டையின் விலை 285 பைசாவாக என்.இ.சி.சி நிர்ணயம் செய்தது. இந்த விலைக்கே பண்ணைகளில் வியாபாரிகள் முட்டை வாங்கி செல்லவேண்டும். பண்ணையாளர்கள் இந்த விலையை குறைத்து விற்பனை செய்யக்கூடாது என கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. ஆடி மாதம் முடிந்து ஆவணி பிறந்துள்ளதால், முட்டையின் விற்பனை பரவலாக அதிகரித்து வருகிறது. இதனால், முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். முட்டைக்கோழி ஒரு கிலோ ^56 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.85 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

## பவானிசாகர் தண்ணீர் திறப்பால் வேளாண் பணிகள் சுறுசுறுப்பு

ஈரோடு, : பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்து போனதால் நீர்வரத்து குறைந்திருப்பது விவசாயிகளை கவலையடைய செய்துள்ளது. இருப்பினும், மாவட்டத்திலுள்ள அனைத்து வாய்க்கால்களிலும் நீர்திறக்கப்பட்டுள்ளதால் வேளாண் பணிகள் சுறுசுறுப்படைந்துள்ளன. பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மற்றும் வடகேரளாவில் பெய்து வந்த கனமழை காரணமாக கடந்த 3 வாரத்துக்கும் மேலாக அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வந்தது. இதன் காரணமாக கடந்த மாதம் 44 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி 76.24 அடியாக உயர்ந்தது. கிட்டத்தட்ட ஒரு மாதத்தில் 32 அடி வரை நீர்மட்டம் உயர்ந்துள்ளது. நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்த சமயத்தில் பில்லூர் அணை நிரம்பி அங்கிருந்து உபரி நீர் தொடர்ந்து அணைக்கு வந்து கொண்டிருந்தது. இதேபோல மோயாறு பள்ளத்தாக்கிலும் மழைநீர் கரைபுரண்டு ஓடி பவானிசாகர் அணையை

வந்தடைந்தது. இதன் காரணமாக இந்த சீசனில் அதிகபட்சமாக 30 ஆயிரம் கனஅடி நீர் வரை நீர்வரத்தானது. கனமழை சற்று தணிந்த போதிலும் அணைக்கு சராசரியாக 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் என நீர்வரத்து இருந்ததால் தொடர்ந்து நீர்மட்டம் உயர்ந்து வந்தது. இந்நிலையில் கடந்த 2 நாட்களாக அணைக்கு நீர்வரத்து படிப்படியாக குறைந்து வருகிறது. நேற்று முன்தினம் காலை 2200 கனஅடியாக இருந்த அணையின் நீர்வரத்து நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு வெறும் 100 அடியாக குறைந்து போனது. இந்நிலையில் நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணையின் நீர்வரத்து 1100 கனஅடியாக இருந்தது. அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் மழை நின்று போனதால் பவானிசாகர் அணைக்கு தற்போது நீர்வரத்து வெகுவாக குறைந்து விட்டது. அணையில் இருந்து பவானி ஆற்றின் வழியே காலிங்கராயன், தடப்பள்ளி- அரக்கன்கோட்டை பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்கு 1100 கனஅடியும், கீழ்பவானி வாய்க்கால் பாசனத்துக்கு 2 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணைக்கு நீர்வரத்து குறைந்துள்ள நிலையில் ஆற்றின் வழியாகவும், கீழ்பவானி வாய்க்காலிலும் நீர்திறப்பு அதிகரித்துள்ளதால் அணையின் நீர்மட்டம் வேகமாக குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வழக்கமாக ஈரோடு மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை சீசன் சமயத்தில் ஓரிரு முறையாவது கனமழை பெய்யும். ஆனால் இம்முறை பெயரளவுக்கு கூட மழை பெய்யவில்லை. இதன் காரணமாக மாவட்டம் முழுவதும் கடும் வறட்சியான காலநிலையே நிலவி வருகிறது. இருப்பினும், காலிங்கராயன், தடப்பள்ளி-அரக்கன்கோட்டை மற்றும் கீழ்பவானி வாய்கால்களில் தொடர்ந்து தண்ணீர் சென்று கொண்டிருப்பதால் பாசனப்பணிகளில் தீவிரம் அடைந்துள்ளன. குறிப்பாக 15ம் தேதி கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்பட்ட பிறகு தற்போது சம்பா நெல் சாகுபடியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். தண்ணீர் திறந்து 2 நாட்கள் ஆன போதிலும் கடைமடையை தண்ணீர் சென்றடையவில்லை. இருப்பினும், தொட்டம்பாளையம், நல்லூர், உக்கரம்,

கோசனம், கடத்தூர், குருமந்தூர், அளுக்குளி, கோபி, காஞ்சிகோவில், கவுந்தப்பாடி போன்ற பகுதிகளில் சம்பா சாகுபடிக்கு வயல்களை தயார் செய்யும் பணியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். இந்நிலையில் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து குறைந்து வருவது விவசாயிகள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும், அணையில் தற்போது 13.2 டிஎம்சி நீர்இருப்பு உள்ளதாலும், தென்மேற்கு பருவமழை சீசன் முடிந்தாலும், அடுத்ததாக வடகிழக்கு பருவமழை சீசனில் நீர்வரத்து அதிகரித்து அணையின் நீர்மட்டம் உயரும் என்ற எதிர்பார்ப்பு நிலவுவதால் சம்பா சீசனுக்கு முறையாக நீர்விநியோகம் செய்ய இயலும் என பொதுப்பணித்துறையினர் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

## <u>தேயிலை தோட்டங்களில் ஊடு பயிராக உருளை கிழங்கு</u>

மஞ்சூர், : குந்தா பகுதி தேயிலை தோட்டங்களில் ஊடு பயிராக மலை காய்கறிகளை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்காட்டி வருகின்றனர். நீலகிரி மாவட்டம் குந்தா பகுதியில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு, குறு விவசாயிகள் பல ஆயிரம் ஹெக்டர் பரப்பில் தேயிலை பயிரிட்டுள்ளார் கள். எமரால்டு, இத்தலார், நஞ்சநாடு, அட்டுபாயில், கல்லக்கொரை, முத்தொரை, பாலாடா உள்ளிட்ட ஒரு சில பகுதிகளில் மலை காய்கறி விவசாயம் அதிகளவில் உள்ளது. இந்நிலை யில் விலை வீழ்ச்சியால் தேயி லை விவசாயிகள் பெரி தும் பாதிக்கப்பட்டுள்ளார் கள். இதையடுத்து வருவாய் இழப்பை ஈடுகட்ட விவசாயிகள் பலரும் தேயிலை விவசாயத்துடன் மலர் மற்றும் மலை காய்கறிகள் சாகுபடியில் ஈடுபடத் துவங்கியுள்ளனர். இதில் சிறிய அளவில் தோட்டங்களை வைத்துள்ள விவசாயிகள் தங்களது தோட்டங்களில் தேயிலை விவசாயத்துடன் ஊடு பயிராக மலைகாய்கறிகளை பயிரிட்டு வருகின்றனர். தேயிலை செடிகளின் இடைவெளிகள், காலியிடங்களில் உருளை கிழங்கு, பீன்ஸ், கேரட், அவரை, பட்டானி உள்ளிட்ட பலவகையிலான காய்கறிகளை பயிரிட்டு வருவாய் ஈட்டுவதில் ஆர்வம் காட்டி வருகிறார்கள். எமரால்டு சுற்றுவட்டார பகுதிகளில்

தேயிலை தோட்டங்களில் உள்ள காலி இடங்களில் தற்போது பெருமளவு உருளை கிழங்கை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

**<u>மழையை பயன்படுத்தி சம்பா சாகுபடியில் அதிக மகசூல் பெறுவது எப்படி? வேளாண் தொழில்நுட்ப வல்லுனர் யோசனை</u>**

'விதை ரகங்கள்' நடப்பு சம்பா பருவத்தில் செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் நெல் சாகுபடி செய்யப்படுகின்றது. இப்பருவத்திற்கு நடுத்தர கால நெல் ரகங்கள் மிகவும் ஏற்றவை ஆகும். உயர் விளைச்சல் அளிக்கும் ரகங்களான ஐ.ஆர்.20, பொன்னி, கோ 43, கோ 49, திருச்சி 1, திருச்சி 3, ஆடுதுறை 38, ஆடுதுறை 39, ஆடுதுறை 46, ஆடுதுறை 49, சி.ஆர் 1009 (சாவித்திரி) ஆகியவற்றை இப்பருவத்தில் சாகுபடி செய்யலாம். அரியலூர், : தற் போது பெய்துள்ள மழையை பயன்படுத்தி தொழில் நுட்பங்கள் மூலம் சம்பா சாகுபடியில் அதிக மகசூல் பெறுவது குறித்து வேளாண் தொழில்நுட்ப வல்லுனர் விவாசாயிகளுக்கு யோசனை தெரிவித்துள்ளார். இதுபற்றி சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில் நுட்ப வல்லுனர் ராஜ்கலா வெளியிட்டுள்ள அறிக்கை: அரியலூர் மாவட்டத்தில் நெல் சாகுபடி ஏறக்குறைய 30 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் செய்யப்பட்டு வருகிறது. தற்போதைய சூழ்நிலையில் அதிகரித்து வரும் நீர்ப்பற்றாக்குறையால் குறைந்த நீரைப் பயன்படுத்தி நெல் உற்பத்தியை அதிகரிக்கவும், நீர்த் தேவையைக் குறைக்கவும் புதிய தொழில்நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டு செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இவ்வகையில் திருந்திய நெல் சாகுபடி முறை மிகவும் குறிப்பிடத்தக்கது. இத்தொழில்நுட்பத்திற்கான கோட்பாடுகளான தகுந்த உயர் விளைச்சல் ரகங்கள், சீரிய மேலாண்மை, சிறந்த நீர், களை நிர்வாகம் போன்ற காரணிகள் அதிக விளைச்சலுக்கு வழிவகுக்கும். விதையளவு ஒற்றை நாற்றாக ஒரு ஏக்கர் நடவு செய்ய 3 கிலோ விதையளவு போதுமானது. ஒற்றை நாற்றுக்கள் சரிவராத தருணத்திற்கு 2 நாற்றுக்களாக நடவு செய்ய 12 முதல் 15 கிலோ விதை போதுமானது. மேலும் ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில்

சூடோமோனாஸ் புளூரசன்ஸ் ஒரு லிட்டர் நீரில் கரைத்து 10 மணி நேரம் ஊற வைத்து நீரை வடிகட்டி பின்னர் விதைக்கலாம். இவ்வாறு ஊற வைத்த விதையை நனைந்த கோணிச் சாக்கில் கட்டி மூடி 24 மணி நேரம் இருட்டில் வைத்து முளைகட்டி பின்னர் விதைக்கலாம். மண் மற்றும் நீர் கட்டுதல் நடவு செய்த முதல் 10 நாட்களில் மிக முக்கியம். பின்னர் 1.0 முதல் 2.0 செ.மீ. அளவிற்கு நீர்ப்பாசனம் செய்து வயலில் மண்ணில் சிறு கீறல்கள் ஏற்படும் தருணம், அடுத்த முறை நீர்ப் பாய்ச்சுதல் வேண்டும். அதன் பிறகு பயிர் கதிர் உருவாகும் தருணத்தில் இருந்து அறுவடை நிலை வரை நான்கு முதல் 5 செ.மீ. அளவிற்கு நீர் பாய்ச்சி கட்டிய நீர் மறைந்த உடன் மீண்டும் நீர் கட்டிட வேண்டும். சதுர நடவு முறையில் நடவு செய்யப்படுவதால் கோனோ வீடர் என்ற உருளைக் களை எடுப்பானைப் பயன்படுத்தி களைக் கட்டுப்பாடு செய்யலாம். கோடையில் சணப்பை, தக்கைப் பூண்டு பயிரிட்டு பின் மடக்கி உழுவதால் மண்ணில் கரிமப் பொருட்களின் அளவு அதிகரிப்பதுடன் பயிருக்கு வேண்டிய தழைச்சத்தும் கிடைக்கின்றது. தகுந்த ரகங்களைத் தேர்வு செய்தல், சரியான பயிர் இடைவெளி, ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து நிர்வாகம், காய்ச்சலும், பாய்ச்சலுமாக நீர் மேலாண்மை, கோனோ வீடர் கொண்டு களை நிர்வாகம் போன்ற தொழில்நுட்பங்களை மேற்கொள்வதால் நெல் சாகுபடியில் அதிக விளைச்சலைப் பெறலாம் என்றார்.

## <u>கிராம விவசாயிகள் கூட்டம்</u>

பாபநாசம், : பாபநாசம் தாலுகா பண்டாரவாடை கிராம விவசாயிகள் கூட்டம் பண்டாரவாடையில் நடைபெற்றது. ஷேக் அலாவுதீன் தலைமை வகித்தார். அப்துல்ரஹ்மான், காதர்உசேன், ஹாஜா ஷெரீப் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் 1962 ஜனாப் ஒழிப்புச் சட்டப்படி பண்டாரவாடை நிலங்கள் முற்றிலும் மிராசுதாரர்களுக்கே சொந்தமானது என்றும், அரண்மனை தேவஸ்தானத்திற்கு உரிமையில்லை என்று சென்னை உயர் நீதி மன்றத்தால் 3-11-88 ல் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் அரண்மனை தேவஸ்தான நிலங்கள் எனச் சிலர்

கூறுவதை கண்டிப்பது, பண்டாரவாடை நில உடமைதாரர்களுக்குச் சொந்தமான நிலங்களை 40 ஆண்டுகள் சாகுபடி செய்ததாகவும், 10 ஆண்டுகளுக்கு முன் வெளியேற்றப் பட்டதாகவும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடுபவர்களை கண்டிப்பது, பண்டாரவாடை மிராசுதாரர்களுக்கு 1968ல் கூட்டுப் பட்டா வழங்கப் பட்டுள்ளது. மேற்படி கூட்டு பட்டாவை தனி பட்டாவாக நிலஉடமை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பிரித்து வழங்க கோரிக்கை விடுத்து வருகிறோம். இதனை உடனடியாக செயல்படுத்தும்படி அரசைகேட்டுக் கொள்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**<u>கடைமடையில் மழை சம்பா சாகுபடி செய்ய புழுதி உழவு துவங்கியது</u>**

சேதுபாவாசத்திரம், : தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் கடைமடை பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு மழை பெய்ததால் விவசாயிகள் புழுதி உழவை துவங்கி யுள்ளனர். தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் கடைமடை பகுதியில் கடந்த 3 வருடங்களுக்கு மேலாக பருவமழை பெய்யவில்லை. இதனால் வழக்கம்போல் நடைபெறும் சம்பா சாகுபடி  முழுமையாக நடைபெறவில்லை. சம்பாசாகுபடியில் ஏற்படும் கலைகளை தவிர்க்க கோடையில் பெய்யும் மழையைக்கொண்டு  கோடை உழவு செய்வது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு கோடையில் அறவே மழை கிடையாது. இதனால் கவலையுடன் இருந்த விவசாயிகள் மத்தியில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணி தொடங்கி அதிகாலை 3 மணி வரை கடைமடை பகுதியில் மழை பெய்தது. இதனைக்கொண்டு கடைமடை விவசாயிகள் பல்வேறு இடங்களில் மகிழ்ச்சியுடன் புழுதி உழவினை தொடங்கினர். ஒருசில இடங்களில் நேரடி விதைப்பிற்கும் விசாயிகள் தயாராகி வருகின்றனர். அதேசமயம் மேட்டூர்அணையிலிருந்து சம்பா சாகுபடிக்காக திறக்கப்பட்ட தண்ணீர் நேற்று காலை கடைமடை பகுதியை வந்தடைந்தது.பாபநாசம்: பாபநாசத்தில் நேற்றுமுன்தினம் ஒரு மணிநேரம்வரை மழை பெய்தது. இதனால் சாலைகளில் உள்ள பள்ளங்களில் தண்ணீர் தேங்கியது. பாபநாசத்தில் நேற்றுமுன்தினம் காலை

வெயில் கடுமையாக அடித்தது. பின்னர் இரவு ஒரு மணி நேரம் நல்ல மழை பெய்தது. இந்த மழையால் தஞ்சாவூர் - கும்பகோணம் மெயின் சாலையில் இருந்த பள்ளங்களில் மழை நீர் தேங்கியது. இதனால் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமப்பட்டனர். சாலையில் நடந்து சென்றவர்கள் மீது வேகமாய் சென்ற வாகனங்கள் மழை நீரை வாரியடித்துச் சென்றன. சாக்கடைகள் தூர் வாராத காரணத்தால் சாக்கடை நீரும் மழை நீரும் கலந்து துர்நாற்றம் வீசியது. பாபநாசம் சீனிவாசப்பெருமாள் கோயில் தெருவில் பிளாட்பாரம் போடுவதற்காக மணலை கொட்டியிருந்தனர். பிளாட்பாரம் முற்றுப் பெறாத காரணத்தால் கொட்டியிருந்த மணல் மழை நீரில் கரைந்தது. பாபநாசத்திலுள்ள அன்னுக்குடி வாய்க்காலை தூர்வாரியிருந்தால் மழைநீர் அதில் சென்றிருக்கும். மேலும் மழையால் மின்சாரம் அவ்வப்போது தடைபட்டது. மின்சாரம் இல்லாமலும், கொசுக்கடியாலும் பொதுமக்கள் தூக்கமின்றி தவித்தனர்.

**<u>விவசாயிகள் மனதை குளிர்வித்த மழை விளை நிலங்களில் தண்ணீர் தேக்கம்</u>**

பரமக்குடி, :கிராம பகுதிகளில் அவ்வப்போது மழை பெய்து வருவதால் விளை நிலங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. இதனால் விவசாயிகள் மனம் குளிர்ந்து மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் விவசாயமும், சிறு தானியங்கள் 5 ஆயிரம் ஹெக்டேரிலும், பயறு வகைகள் 4 ஆயிரம் ஹெக்டேரிலும், எண்ணெய் வித்துக்கள் 6 ஆயிரத்து 700 ஹெக்டேரிலும், பருத்தி 2 ஆயிரத்து 400 ஹெக்டேரிலும் பயிரிடப்படுகிறது. விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், நெல் உற்பத்தியை அதிகப்படுத்தவும், குறைந்த செலவில் அதிக மகசூல் பெறவும், செம்மை நெல் சாகுபடி போன்ற நவீன தொழில் நுட்பத்தை அரசு அறிமுகப்படுத்துகிறது. இருந்தபோதும் கடந்த சில ஆண்டுகளாக போதிய அளவு பருவமழை இல்லாததால் ராமநாதபுரம் மாவட்டத்தில் விவசாயம் கேள்விக்குறியாக

மாறி வருகிறது. கடந்த ஆண்டு வைகை அணையில் இருந்து நீர் வரத்து முற்றிலும் குறைந்தது. இதனால் பாசன கண்மாய்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. பருவ மழை பற்றாக்குறையால் நீரின்றி விவசாயம் கடுமையாக பாதித்தது. ராமநாதபுரம் மாவட்டம் வறட்சிப் பகுதியாக உள்ளதால் ஏற்கனவே பல விவசாயிகள் தங்களின் நிலங்கள், வீடுகளை விற்றுவிட்டனர். விவசாய நிலங்கள், பிளாட் போட்டு விற்கப்படுகிறது. கடந்த சில நாட்களாக ராமநாதபுரம் மாவட்டத்தில் பல இடங்களில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. குறிப்பாக பரமக்குடியை சுற்றியுள்ள பாண்டிகண்மாய், சத்திரக்குடி, தினைக்குளம், மஞ்சூர் உள்ளிட்ட கிராம பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களாக வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. அதைத்தொடர்ந்து அவ்வப்போது மிதமான மழை பெய்து வருகிறது. இதையடுத்து வறண்டு கிடந்த விவசாய நிலங்களில் ஓரளவு மழைநீர் தேங்கியது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். இதுகுறித்து விவசாயி லெட்சுமணன் கூறுகையில், `கடந்த இரண்டு நாட்களாக அவ்வப்போது மழை பெய்து வருகிறது. இதனால் நிலத்தடி நீரும், கண்மாய்களில் நீர்மட்டமும் ஓரளவு உயர்ந்து வருகிறது. வரும் மாதங்களில் மழை அதிகளவு பெய்யும் என நம்புகிறோம். மழையை நம்பியே இப்பகுதியில் விவசாயம் செய்யப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக போதிய விளைச்சல் இல்லாதபோதும், இந்த வருடம் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கும் என்று நம்புகிறோம் என்றார்.

**<u>இலவச பண்ணை குட்டை மூலம் உபரி வருவாய் வேளாண்மை அலுவலர் தகவல்</u>**

நெல்லை, : வள்ளியூர் வேளாண்மை உதவி இயக்குனர் ஜோ தேடியஸ் விடுத்துள்ள செய்தி குறிப்பு: வள்ளியூர் வட்டாரத்தில் தமிழக அரசின் வேளாண்மை துறையின் சார்பில் பண்ணை குட்டைகள் அமைக்கும் திட்டம் இலவசமாக விவசாயிகளுக்கு அமைத்து கொடுக்கப்படுகிறது. இத்திட்டம் வேண்டி விண்ணப்பிக்க விரும்பும் விவசாயிகள் வள்ளியூர் வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளவேண்டும். பண்ணை குட்டைகள் அமைப்பதன் மூலம் மழைநீரை

சேகரித்து மழைஇல்லாத காலங்களில் பயிர்களுக்கு நீர் பாய்ச்ச முடியும். மேலும் கூடுதல் செலவின்றி மீன் வளர்ப்பு தொழில் செய்து உபரி வருமா னம் ஈட்டமுடியும். நிலத்தடி நீர்மட்டம் உயரவும் வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>மழை ஏமாற்றியதால் மஞ்சள் சாகுபடி குறைந்தது; மாற்று பயிருக்கு தாவும் கள்ளக்குறிச்சி விவசாயிகள்</u>**

தியாகதுருகம் : மழை குறைந்ததன் எதிரொலியாக கள்ளக்குறிச்சி பகுதியில் மஞ்சள் சாகுபடி பரப்பு குறைந்து மாற்று பயிர் செய்வதில் விவசாயிகளின் ஆர்வம் திரும்பியுள்ளது. கள்ளக்குறிச்சி சுற்றியுள்ள பகுதியில் ஆண்டுதோறும் 3 ஆயிரம் ஏக்கர் பரப்பில் மஞ்சள் சாகுபடி செய்யப்படுகிறது. கிணற்று நீர் பாசனம் உள்ளவர்கள் மட்டுமே இதனை பயிரிடுகின்றனர்.பராமரிப்பது எளிதாக இருந்தாலும், ஆண்டு முழுவதும் தண்ணீர் தேவைப்படுகிறது. அறுவடைக்கு பின் கிழங்கை வேக வைத்து பாலீஷ் செய்து பக்குவப்படுத்துவது மிகவும் சிரமம். இதனால் இதை பயிரிட விவசாயிகள் தயங்குகின்றனர். இருப்பினும் பெரிய அளவில் விலை வீழ்ச்சியடையாமல் நல்ல லாபம் கிடைப்பதால் குறிப்பிட்ட விவசாயிகள் மஞ்சள் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். இதன் சாகுபடி பரப்பு அதிகரித்ததால் கள்ளக்குறிச்சியில் 5 ஆண்டுகளுக்கு முன் மஞ்சள் மார்க்கெட் துவக்கி, நேரடி விற்பனை துவக்கப்பட்டது. கடந்த 3 ஆண்டுகளாக மழை ஏமாற்றியதால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கிணற்று நீர் பாசனம் பாதித்தது. பணத்தை செலவிட்டு கிணற்றை ஆழப்படுத்திய போதிலும் தண்ணீர் ஊற்றெடுக்காமல் ஏமாற்றம் மிஞ்சியது. இதனால் மஞ்சள் பயிருக்கு தண்ணீர்

பாய்ச்சுவது கேள்விக்குறியானது.இப்பிரச்னையை சமாளிக்க முடியாமல் மஞ்சள் சாகுபடி மீது விவசாயிகளுக்கு ஆர்வம் குறையத் துவங்கியது. கரும்பு பயிரிடுவதால் எளிதில் லாபம் ஈட்ட முடிவதாலும், குறுகிய கால பயிர்களிலும் மற்றும் காய்கறி சாகுபடி செய்வதிலும் விவசாயிகள் ஆர்வம் காட்ட துவங்கினர். இதனால் மஞ்சள் பயிரிடும் பரப்பு குறைந்து கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டிக்கு விற்பனைக்கு வரும் மஞ்சள் மூட்டையின் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது. இங்கு வியாபாரிகள் வருகை குறைந்ததால் எதிர்பார்த்த விலை கிடைக்காமல் விவசாயிகள் ஏமாற்றமடைந்தனர். இதனால் மஞ்சள் மூட்டைகளை வாடகை லாரியில் ஏற்றி ஈரோடு சந்தைக்கு விற்பனைக்கு எடுத்து செல்கின்றனர்.

## தர்மபுரியில் பரவலாக மழை

தர்மபுரி,:தர்மபுரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் இருந்த போதும் லேசான சாரல் மழை மட்டும் பெய்து வந்ததால், விவசாயிகள் கவலையில் இருந்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை முதல், தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. மாவட்டத்தில் அதிகபட்சமாக பென்னாகரத்தில், 46 மில்லிமீட்டரும், ஒகேனக்கல்லில், 42.40 மி.மீ., தர்மபுரியில், 20 மி.மீ., பாப்பிரெட்டிப்பட்டியில், 11,10 மி.மீ., அரூரில், 4 மி.மீ., மழையளவும் பதிவானது. இந்நிலையில், நேற்று, தர்மபுரி உட்பட, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## நம்பியூரில் விவசாயிகள்ஆலோசனை கூட்டம்

கோபி, :நம்பியூர் வட்டார வேளாண்மை துறை சார்பில், வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டம் குறித்த, விவசாயிகள் மற்றும் அரசு அதிகாரிகள் அடங்கிய கூட்டுக்கூட்டம் நடந்தது. நம்பியூர் வேளாண் உதவி இயக்குனர் அசைத்தம்பி, திட்ட செயல்பாடுகள் குறித்து, தலைமை வகித்து பேசினார். வட்டார விவசாய ஆலோசனைக்குழு தலைவர் மணி முன்னிலை

வகித்தார். ஈரோடு தோட்டக்கலை துணை இயக்குனர் (பொறுப்பு) கணேசமூர்த்தி, வேளாண் பொறியியல் துறை உதவி பொறியாளர் வெள்ளியங்கிரி, கால்நடை உதவி மருத்துவர் ஜோதிகுமார், வேளாண்மை வணிகத்துறை வேளாண் அலுவலர் கார்த்திகேயன், பட்டு வளர்ச்சி துறை இளநிலை ஆய்வாளர் சந்திரன் ஆகியோர் பேசினர். கோசனம், மலையம்பாளையம், சின்னாரிபாளையம், மொட்டனம், சுண்டக்காம்பாளையம், கூடக்கரை உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த, 25க்கும் மேற்பட்ட விவசாய உறுப்பினர்கள், கூட்டுறவு அலுவலர்கள், இடுபொருள் விற்பனையாளர் உள்ளிட்டோர் திரளாக கலந்து கொண்டனர்.வட்டார தொழில் நுட்ப மேலாளர் மோகனசுந்தரம் நன்றி கூறினார்.

## நேந்திரன் வாழையை காக்க 'நைலான் வலை'

பந்தலுார் : பந்தலுார் பகுதியில் வன உயிரினங்களிடம் இருந்து நேந்திரன் வாழை பழங்களை காப்பாற்ற விவசாயிகள் புது முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். நீலகிரி மாவட்டம் கூடலுார், பந்தலுார் பகுதிகள், கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தை ஒட்டி அமைந்துள்ளது. தேயிலை, குருமிளகு, இஞ்சி, நேந்திரன் வாழை, காபி சாகுபடியில், பந்தலுார் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.நேந்திரன் வாழை விவசாயத்தில், 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே பலன் தரக்கூடிய நேந்திரன் வாழை, விவசாயத்தை தற்போது காட்டுயானைகள் சேதப்படுத்தி வருவதால், நஷ்டமும் ஏற்பட்டு வருகிறது. நேந்திரன் வாழை காய்கள் மற்றும் பழங்களை பறவைகள் மற்றும் குரங்குகள் அழிப்பதால், அதனை பாதுகாக்க புதிய வழிமுறைகளில் விவசாயிகள் இறங்கி உள்ளனர்.தோட்டத்தில் உள்ள குலை தள்ளிய வாழை தார்களை 'நைலான்' பைகள் மூலம் மூடி வைக்கும் புதிய முறையை பின்பற்றி வருகின்றனர்.

## களைகட்டும் காரட் விவசாயம்; சிறு விவசாயிகள் மகிழ்ச்சி

கோத்தகிரி : கோத்தகிரி பகுதியில் காரட் விவசாயம் களைக்கட்டியுள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கோத்தகிரி சுற்றுவட்டாரப் பகுதிகளில் தேயிலைக்கு அடுத்தப்படியாக, நீர் ஆதாரம் உள்ள நிலங்களில் காரட், பீன்ஸ், உருளைக்கிழங்கு பீட்ரூட் மற்றும் முள்ளங்கி உள்ளிட்ட மலைக்காய்கறி பயிர் செய்யப்படுகிறது.நடப்பாண்டு, நீலகிரி மாவட்டத்தில் குறிப்பாக, கோத்தகிரி பகுதியில், மழை மிக குறைந்தளவே பெய்துள்ளது.இதனால், நீர் ஆதாரங்கள் வறண்டுள்ள நிலையில், மழையை நம்பி விவசாயம் செய்த விவசாயிகள் பலர், மோட்டார் பம்ப் உதவியுடன், பல்வேறு சிரமங்களுக்கு இடையே, காரட் பயிரிட்டு பாதுகாத்து வருகின்றனர்.கோத்தகிரி நெடுகுளா, வ.உசி., நகர், மிளிதேன், எரிசிபெட்டா, கூக்கல்தொரை மற்றும் தூனேரி உள்ளிட்ட பகுதிகளில் பல ஏக்கர் பரப்பளவில் காரட், அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.வெளிச்சந்தையில், ஒரு கிலோ காரட் குறைந்தபட்சம் 30 ரூபாய் முதல், அதிகப்பட்சம், 43 ரூபாய் வரை, விலைக் கிடைப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இனிவரும் நாட்களில் மழைப்பெய்யும் பட்சத்தில், தாழ்வான சமமான நிலங்களில் பயிரிட்டுள்ள காரட் பயிர்கள் மழைநீர் தேங்கி அழுக வாய்ப்புள்ளதால், விவசாயிகள் அவசர கதியில் அறுவடை செய்ய தயாராகி வருகின்றனர்.

## பரமத்தியில் 3 நாட்களாக மழை: மகிழ்ச்சியில் விவசாயிகள்

க.பரமத்தி: கரூர் மாவட்டம், க.பரமத்தி பகுதியில் கடந்த, மூன்று நாட்களாக மழை பெய்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.கரூர் மாவட்டம், க.பரமத்தி யூனியனில் உள்ள, 30 பஞ்சாயத்துகளில், 75 சதவீதம் பேர் விவசாயிகளாக உள்ளனர். இவர்கள் பெரும்பாலும், ஆடு, மாடு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும், தென்மேற்கு பருவமழை

ஆகஸ்ட் மாதம் துவங்கி நவம்பர் மாதம் வரை பெய்யும். அப்போது காடுகளில்புல் வளர்வதில் கால்டைகளுக்கு தீவனம் குறைவில்லாமல் கிடைப்பதுடன், கோடை காலத்திலும் காடுகளில் சோளத்தட்டு, கடலைச் செடி, வைக்கோல், போன்ற வற்றை விளைவித்து இருப்பு வைத்து சமாளித்து வருகின்றனர். கடந்த, நான்காண்டாக பருவமழை பொய்த்ததால், மழைக்காலங்களில் பெரும் பெரும் சிரமத்துடன், தீவனத்தை விலைக்கு வாங்கும் நிலை தள்ளப்பட்டனர்.இந்தாண்டு , பருவமழை ஆகஸ்ட் மாதத்திலேயே துவங்கியதால், அதிகமானோர் கால்நடை களை வளர்க்க துவங்கியுள்ளனர்.கடந்த, மூன்று நாளாக மழை பெய்து வருவதால், க.பரமத்தி யூனியனில் உள்ள விவசாயிகள் மட்டுமன்றி அனைவரும் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## <u>ரூ.156.74 கோடியில் அம்மா விதைகள் பயிற்சி முகாமில் அமைச்சர் தகவல்</u>

தஞ்சாவூர் :""விவசாயிகளுக்கு, 156.74 கோடி ரூபாய் மதிப்பில் அம்மா விதைகள் வழங்கப்படும்," என, பயிற்சி முகாமில் அமைச்சர் வைத்திலிங்கம் தெரிவித்தார். தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில், அங்ககப் பண்ணையம் குறித்த விவசாயிகளுக்கான பயிற்சி முகாம், தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு அரசு மகளிர் கல்லூரியில் நடந்தது. இதில், கலெக்டர் சுப்பையன் தலைமைவகித்தார். வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் வைத்திலிங்கம் துவக்கிவைத்து பேசியதாவது: ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாகவும், கிராமப்புற மக்களின் வாழ்விற்கு ஆதாரமாகவும் விளங்குவது வேளாண் தொழில். இந்தியாவின் அந்நியசெலாவணியை ஈட்டித்தருவதில் தோட்டக்கலைப் பயிர்கள், பெரும்பங்கு வகிக்கிறது. மண் வளம் மேம்படுத்தல், விதை மற்றும் நுண்ணூட்டச்சத்து உரங்கள் உரிய நேரத்தில் கிடைக்கச் செய்தல், பயிர் கடன் வழங்குதல், நுண்ணீர் பாசனத்திட்டம், வேளாண் கருவிகள் மானிய விலையில் வழங்குதல்

போன்றவற்றின் மூலம், விவசாய உற்பத்தியை, இரு மடங்காகவும் பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.இதன் காரணமாக, 2013-14ம் ஆண்டு உணவு தானிய உற்பத்தியில், 110.65 லட்சம் மெட்டரிக் டன் இலக்கை அடைய முடிந்தது. அம்மா பண்ணை மகளிர் திறன் மேம்பாட்டுத்திட்டத்தில், இடுபொருட் கள் உற்பத்தி உள்ளிட்ட விவசாய பணிகள் மற்றும் அறுவடைக்கு பிந்தய செய் நேர்த்தி ஆகியவற்றில், மகளிருக்கு பயிற்சி வழங்க, 113.26 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்.தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை மூலம், தமிழக விவசாயிகள் சான்று பெற்ற விதைகளை உபயோகிப்பதை ஊக்குவிக்கும் வகையில், 156.74 கோடி ரூபாய் மதிப்பில், அம்மா விதைகள் வழங்கப்பட உள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.முகாமில், எம்.பி., பரசுராமன், மாவட்ட பஞ்.,தலைவர் அமுதாராணி, மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் துரை.திருஞானம், மாவட்ட பால் கூட்டுறவு சங்கத் தலைவர் காந்தி, வேளாண் துறை இயக்குநர் சேகர், தோட்டக் கலைத்துறை துணை இயக்குனர், தமிழ்களஞ்சியம் உட்பட பலர் பங்கேற்றனர்.

## <u>சிறுதானிய உணவகம் திறப்பு</u>

ராமநாதபுரம் : ராமநாதபுரம் கலெக்டர் அலுவலக வளாகத்தில் மகளிர் குழு சார்பில் "சிறுதானிய பாரம்பரிய உணவகம்' திறக்கப்பட்டது. ஊரக வளர்ச்சி துறை திட்ட இயக்குனர் பழனி திறந்தார். மகளிர் திட்ட அலுவலர் (பொறுப்பு) பூங்குழலி வரவேற்றார். உதவி திட்ட அலுவலர்கள் ஜான் லிங்டன், மருதுபாண்டியன், மேலாளர் (மார்கெட்டிங்) தங்கபாண்டியன் பங்கேற்றனர். இங்கு கம்பு, குதிரைவாலி, சாமை, முளைகட்டிய பயறு உள்ளிட்ட 32 வகையான பாரம்பரிய சிறுதானியங்களின் "ஸ்நாக்ஸ்' மற்றும் உணவுகள் கிடைக்கும். தினமும் காலை 9 முதல் மாலை 5 மணி வரை உணவகம் செயல்படும்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மதுரையில் இரவு முழுவதும் தொடர்மழை**

மதுரையில் நேற்று மாலை 4 மணியளவில் கருமேகங்கள் சூழ்ந்தன. இருந்தபோதிலும் மழை பெய்யாமல் ஏமாற்றியது. வாடிப்பட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கனமழை கொட்டித்தீர்த்தது. அதே நேரத்தில் 6 மணியளவில் மதுரை நகரில் ஆங்காங்கே லேசான சாரல் மழை தொடர்ந்தது. பின்னர் இரவு 9 மணிக்கு மேல் நகர் முழுவதும் தொடர்ந்து 2 மணி நேரத்திற்கும் மேலாக மழை பெய்யத்தொடங்கியது. இந்த மழை 2 மணி நேரத்திற்கும் மேலாக நள்ளிரவு வரை தொடர்ந்தது. சீராக பெய்த இந்த மழையால் மதுரை நகர் குளிர்ந்தது. சேதம் எதுவும் இல்லை என போலீசார் தெரிவித்தனர்.

**<u>போதிய விலை கிடைப்பதால் முட்டைகோஸ் சாகுபடியில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்</u>**



மசினகுடி பகுதியில் பயிரிடப்பட்டு உள்ள முட்டைகோஸ் பயிர்களை படத்தில் காணலாம்.

போதிய விலைகிடைப்ப தால் மசினகுடி பகுதியில் உள்ள விவசாயிகள் முட்டைகோஸ் பயிரிட அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள்.
மசினகுடிவிவசாயிகள்

மசினகுடி பகுதியில் உள்ள மாயார், பொக்காபுரம், மாவ னல்லா, வாழைத் தோட்டம், சொக்கநள்ளி, ஆனைக்கட்டி போன்ற பகுதிகளில் பல ஏக்கர் பரப்பளவில்விவசாயம் நடந்து வருகிறது. விவசாயிகள் தங்களது நிலங்களில் அந்தந்த காலத்திற்கு ஏற்ப 3 மாத காலப்பயிர், 6 மாத காலப் பயிர் என பயிர் செய்து வரு கின்றனர். குறிப்பாக உருளைக்கிழங்கு, பூண்டு, பீன்ஸ், பஜ்ஜி மிளகாய், குடை மிளகாய், கத்திரிக்காய், பாகற்காய், தக்காளி, வெண் டைக்காய், முட்டை கோஸ் போன்ற பல்வேறு காய்கறி பயிர்களை பயிர் செய்து வரு கின்றனர்.
முட்டைகோஸ்பயிர்கள்

இதில் தற்போது பீன்ஸ், பஜ்ஜி மிளகாய் ஆகிய காய் கறிகளுக்கு சந்தைகளில் நல்ல விலை கிடைத்து வருகிறது. அதே போல முட்டை கோசுக் கும் அதிக விலை கிடைப்ப தால் மசினகுடி பகுதியில் உள்ள விவசாயிகள் தற்போது முட்டைகோசை அதிகளவில் பயிர் செய்ய தொடங்கி உள் ளனர்.முன்னதாக பயிர் செய்யப் பட்ட முட்டைகோஸ் அறு வடைக்கு தயாராக உள்ளது. ஒரு கிலோ முட்டைகோஸ் ரூ.15 முதல் ரூ.20 வரை விற் பனையாகி வருகிறது. சில சமயங்களில் வியாபாரிகள் விவசாய நிலங்க ளுக்கு வந்து முட்டைகோசை அதிக விலை கொடுத்து எடுத்து செல்கின்ற னர். இதனால் விவசாயிகள் நல்ல லாபம் அடையதொடங்கி உள்ளனர்.
பயிரிடஆர்வம்

மசினகுடி பகுதியில் சாகு படி செய்யப்படும் முட்டை கோசை விவசாயிகள் ஊட்டி, மேட்டுப்பாளையம் போன்ற பகுதிகளுக்கு எடுத்து சென்று விற்பனை செய்து வருகின்ற னர். கடந்த சில ஆண்டுகளாக முட்டைகோஸ் மிக குறைந்த விலைக்கு விற்பனை ஆனதால் விவசாயிகள் முட்டைகோஸ் சாகுபடியை கைவிட்டனர். ஆனால் தற்போது நல்ல விலைக்கு விற்பதால் மீண்டும் விவசாயிகள்ஆர்வமுடன் முட்டை கோசை பயிர் செய்ய தொடங்கி உள்ளனர்.

## வைகை அணை நீர்மட்டம் 48 அடியாக உயர்ந்தது



தேனி, வைகை அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்ததையடுத்து, அணையின் நீர்மட்டம் 48 அடியாக உயர்ந்தது. தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே வைகை அணை உள்ளது. பருவமழைகள் பொய்த்து போனதால் 71 அடி உயர வைகை அணை கடந்த சில ஆண்டுகளாக நிரம்பவில்லை. இந்நிலையில் முல்லைப் பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையால் அணை நீர்மட்டம் அதிகரித்தது. இதை அடுத்து அணையில் இருந்து கடந்த சில வாரங்களாக தண்ணீர் அதிக அளவில் திறக்கப்பட்டு வருகிறது. நீர்வரத்து காரணமாக அதல பாதாளத்தில் இருந்த வைகை அணை நீர்மட்டம் சீராக உயர தொடங்கியது. வெள்ளிமலை வனப்பகுதியில் பெய்த மழை காரணமாக மூலவைகையில் நீர்வர தொடங்கியது. இதனால் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. நேற்று காலை நிலவரப்படி வைகை அணை நீர்மட்டம் 47.90 அடியாக இருந்தது. பிற்பகலில் நீர்மட்டம் 48 அடியை தாண்டியது. அணைக்கு வினாடிக்கு 1,016 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. மதுரை மற்றும் சேடப்பட்டி கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்காக வினாடிக்கு 60 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. மாலை நிலவரப்படி அணையில் 1,730 மில்லியன் கனஅடிநீர் இருப்பு உள்ளது. முல்லைப்பெரியாறு முல்லைப்பெரியாறு அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 322 கன அடியாக குறைந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 1,000 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அணை நீர்மட்டம் 122.70 அடியாக

காணப்படுகிறது. அணையில் மொத்தம் 3 ஆயிரத்து 163 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது. மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 28.95 அடியாக காணப்படுகிறது. நீர்வரத்து இல்லாத நிலையில் அணையில் இருந்து வினாடிக்கு 8 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அணையில் மொத்தம் 67.59 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது. சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 40.18 அடியாக குறைந்தது. நீர்வரத்து இல்லாத நிலையில் அணையில் இருந்து வினாடிக்கு 3 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அணையில் 10.35 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது. நேற்று முன்தினம் பெய்த மழையளவு (மில்லி மீட்டரில்) வருமாறு:- பெரியாறு-2.4, தேக்கடி-2.8, கூடலூர்-1.5, வீரபாண்டி-4, மஞ்சளாறு-7, சோத்துப்பாறை-6.

**<u>நீடாமங்கலம் அருகே மூணாறு தலைப்புக்கு காவிரி நீர் வந்தது விவசாயிகள் மகிழ்ச்சி</u>**



நீடாமங்கலம் அருகே உள்ள மூணாறு தலைப்புக்கு காவிரிநீர் வந்தடைந்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். மூணாறு தலைப்பு கல்லணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர், நீடாமங்கலம் அருகே உள்ள மூணாறு தலைப்புக்கு வந்தடைந்தவுடன் அதை வெண்ணாறு, கோரையாறு, பாமணியாறு ஆகியவற்றுக்கு பிரித்து விடப்படுவது வழக்கம். வெண்ணாற்றின் மூலம் 94

ஆயிரத்து 219 ஏக்கர் நிலங்களும், கோரையாற்றின் மூலம் 1 லட்சத்து 20 ஆயிரத்து 957 ஏக்கர் நிலங்களும், பாமணியாற்றின் மூலம் 38 ஆயிரத்து 357 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன. வழக்கம்போல் இந்த ஆண்டும் மேட்டூர் அணையானது தாமதமாக கடந்த 10–ந் திறக்கப்பட்டது. இந்த நீரானது கல்லணைக்கு வந்தது. கல்லணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் பெரிய வெண்ணாற்றிலிருந்து மூணாறு தலைப்பிற்கு நேற்றுமுன்தினம் மாலை வந்தடைந்தது. இதில் வெண்ணாற்றில் 718 கனடியும், கோரையாற்றில் 743 கன அடியும் நீர் பிரித்து விடப்பட்டது. இதனால் அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## திருவண்ணாமலையில் பலத்த மழை



திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. கடந்த 16–ந் தேதி இரவு 8 மணிக்கு தொடங்கிய மழை இரவு முழுவதும் பெய்தது. அதேபோன்று நேற்று முன்தினமும் இரவு மழை பெய்தது. இந்த நிலையில் நேற்று மாலை வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. சுமார் 4 மணி அளவில் பலத்த காற்றுடன் மழைபெய்யத் தொடங்கியது. தொடர்ந்து சுமார் ஒரு மணி நேரம் பலத்த மழை பெய்தது. திருவண்ணாமலை மாவட்டத்தில் தொடர்ந்து பலத்த மழைபெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## சிவகாசி பகுதியில் 2 நாட்களாக தொடர்ந்து மழை



சிவகாசி மற்றும் அதன் சுற்றுப்பகுதியில் கடந்த 2 நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. கண்மாய்களுக்கும் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. விஜயரங்கபுரத்தில் உள்ள கோட்டை கண்மாய் நிரம்பி உள்ளது. விஜயகரிசல்குளத்தில் உள்ள பாண்டியன்குளம் காண்மாய்க்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. இதையொட்டி இந்த கண்மாயின் கரையை பலப்படுத்தும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். தாயில்பட்டி, வெம்பக் கோட்டை பகுதியில் உள்ள மற்ற கண்மாய்களுக்கும் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.